தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக் கிழமை 1982 ஏப்ரல் 2

பங்குனி 20 துன்மதி திருவள்ளுவர் ஆண்டு 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்''

கற்றவரின்முன், தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லி மிகுதியாகக் கற்றவரிடம் அம்மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி.

* வினா எண் 718 —திரு. இ. கணேசன் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மீனவர்களுக்கு இரால் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாட்டில் இரால் உற்பத்தி குறையவில்லை. அதிகரித்து வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இரால் உற்பத்தியின் அளவு பின்வருமாறு ;

ஆண்டு.	இரால் உற்பத்தி (மெட்ரிக் டன்கள்)
1979–80	7,121
1980–81	12,984

(ஆ) இரால் உற்பத்தி குறையவில்லை என்றாலும், உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் நோக்கத்தோடு, கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ளப் பயிற்சி (TRYSEM) என்னும் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில்

[1982 ஏப்ரல் 2

6 பயிற்சி நிலையங்களில் 1,080 மாணவர்களுக்குஉவர் நீர் இரால் மீன் வளர்க்கும் முறைப்பற்றி பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இப்பயிற்சி ஒன்றரை மாதக்கால அளவிற்கு அளிக்கப்படுகிறது. இதுவரை 654 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிகவும் நீளமான கடற்கரை உள்ளது. இரால் மீன்களும் ஏராளமாகக் கிடைக்கின்றது. இந்த இரால் மீன்களைத் தனியார் நிறுவனங்கள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகின்றது. இந்த ஏற்றுமதிப் பொறுப்பிற்காக கூட்டுறவு இணையம் அமைத்து அதன்மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்வதற்கு பல்வேறு நிறுவனங் கள் இருக்கின்றன. அதற்கு தனியாக இணையம் அமைக்க வேண்டும் என்றால் தனியாகத்தான் ஆலோசிக்கவேண்டும். மேலும் பிடிக்கப்படுகின்ற இரால் மீன்களின் அளவு கூட நாளுக்கு நாள் குறைகின்றது என்றும் அதை அதிகப்படுத்துகின்ற முயற்சியிலே பல மாநிலங்களும் ஈடுபடுகின்றன. ஆனால் தனி இணையம் வேண்டும் என்றால் தனியாகத்தான் ஆராய வேண்டும்,

திருமதி டி. யசோதா : தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் இரால் விற்பனைக்காகத் தனிப்பட்ட முதலாளிகள் முன்பணம் கொடுத்து குறைந்த விலையிலே அதை வாங்குகிறார்களே, அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. எனவே தனியாகத்தான் ஆராயவேண்டும்.

திரு ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த இரால் மீன்களைப் பிடிப்பதற்கு விசைப்படகைப் பயன்படுத்து கிறார்கள். அப்படி விசைப் படகைப் பயன்படுத்துகின்றவர்கள் வலையை வேகமாக போடுவதன் காரணத்தால் முட்டைகள் எல்லாம் உடைந்து நாசமாகிவிடுவதால் அந்த இரால் மீன் உற்பத்தி கணிசமாகக் குறைந்துவிடுகின்றது என்பதை அரசு அறியுமா? இதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று தொழில் நுட்பத்தன்மையின் அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வல்லுநர்கள்தான் தனியாக ஆராய

வேண்டும். ஆனால் இரால் மீனுக்கு அதிக கிராக்கி இருப்பதன் காரணத்தால் அதை அதிகரிப்பதற்கான முயற்சியிலே எல்லா மாநிலங்களும் முனைந்து ஈடுபட்டிருக்கின்றன. நாமும் முனைந்து ஈடுபட்டு இருக்கிறோம். உவர் நீரில் இரால் மீன் வளர்ப்பதற்காக 10 இடங்களில் மாதிரிப் பயிற்சிப் பண்ணைகள் வைத்து அதன் மூலமாக மற்றவர்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். நல்ல தண்ணீரிலேயே இரால் மீன் வளர்க்கலாம் என்ற அளவுக்கு இப்போது மீன்வளத் துறையினர் ஆராய்ந்து அதிலே வெற்றி கண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டிலே ஆராய்ச்சி நடத்தப்பட்டு ஒரு ஹெக்டேரிலே இரண்டு அறுவடை செய்யலாம் என்றும் ஆண்டு ஒன்றுக்கு 10,000 ரூபாய் கிடைக்கும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் பரவலாக ஆக்க முயற்சி அரசு மேற்கொண்டிருக்கின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கடற்கரையின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள இரால் மீன்களை ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளின் கப்பல் வந்து பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால்தான் அதிகமான அளவிலே இரால் மீன் குறைபாடு ஏற்படுகின்றது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம் கடற்கரைப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட எல்லை நமக்கு இருக்கிறது, அந்த எல்லைக்குள் யாரும் நுழைய முடியாது. அங்கே நாம்தான் மீன் அரிக்கும் முயற்சியை மேற்கொள்கிறோம். அந்த எல்லைக்கு அப்பாற்பட்டு வங்காள விரிகுடாக் கடலிலோ, இந்து மகா சமுத்திரத்திலோ, அரபிக் கடலிலோ எந்த நாட்டுக் கப்பல்களும் வந்து மீன் அரிக்கலாம். ஆனால் சில சமயங்களில் நம் எல்லைக்குள் நுழையும்போது இந்தியக் கடற்படையினர் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். முன்பு கூட இரண்டு மூன்று தடவை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே போதுமான பாதுகாப்பை இந்திய கப்பல் படைத் துறையினர் செய்து வருகிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : இராலைப் பதனிட ப்ரீஸிங் ப்ளான்ட் அரசுத் தரப்பில் ஏற்படுத்தப்பட்டு, மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டு, அதை வெளி மாநிலத்தவருக்கு குத்தகைக்கு விட்டு இருப்பதால் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அதை இலாபகரமாகச் செய்ய அரசுத் துறையிலேயே அதை ஏற்று நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் என்ன காரணத்தால் அப்படி விட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்ற விளக்கத்தை அளிக்க முடியும்.